# மாகாணத் திறைசேரி – வடமாகாணம்

# Provincial Treasury – Northern Province

# පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත


My No: - NP/09/FRM/2011 15.12.2011

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல: PT/17/2011**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

## <u>2012 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின்படி அரசாங்க சேவையிலுள்ள படிகளைத் திருத்துதல்</u>

பொது நிர்வாக அமைச்சின் 31/2011ம் இலக்கமும் 12.12.2011ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்படி சுற்றுநிருபத்திற்கமைய 28/2010ம் இலக்கமும் 2010.12.31ம் திகதியும் கொண்ட பொது நிர்வாக அமைச்சின் சுற்றுநிருபத்திற்கிணங்க வழங்கப்பட்ட 5% விசேடபடிக்கப் பதிலாக பின்வரும் முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

2.1 ஆரம்ப மாதச்சம்பளம் (Initial Salary) ரூபா.22,935/-ற்கு குறைந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய பதவிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்/ ஊழியரிற்குரிய விசேடபடியானது அவர்களின் அடிப்படைச் சம்பளத்தின் (Basic Salary) 15% ஆக 01.01.2012ம் திகதியிலிருந்து வழங்கப்படல் வேண்டும்.

2.2 ஆரம்ப மாதச் சம்பளம் ரூபா.22,935/-ற்குச் சமனான அல்லது அதிகமான ஆரம்பச் சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய பதவிகளில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் விசேடபடியானது 01.01.2012ம் திகதியிலிருந்து அவர்களின் அடிப்படைச் சம்பளத்தின் 10% ஆகவும், 01.07.2012ம் திகதியிலிருந்து அடிப்படைச் சம்பளத்தின் 15% ஆகவும் வழங்கப்படல் வேண்டும்.

2.3 9/2007ம் இலக்கமும், 11.05.2007ம் திகதியும் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளப் பணிக்கமர்த்தப்பட்ட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிற்கு 2.1, 2.2ம் பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட பின்னர் மீளப் பணிக்கமர்த்திய பதவிகள் குறித்துச் சார்ந்திருந்து அவர்களிற்கு வழங்கப்படும் மாதாந்தப்படியின் அடிப்படையில் விசேட படி வழங்கப்படல் வேண்டும்.




79/2, Rakka Road, Chundikuli, Jaffna.
Phone No: DCS(F) Direct 021 2220850 , Fax - 021 - 2220853 , General No: 021 - 2220854
E-Mail: nptreasury@gmail.com

2.4 அமைய/நாட் சம்பள அடிப்படையில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களிற்கு அவர்களுடைய நாட்சம்பளத்தின் 15% விசேட படியாக வழங்கப்படும்.

2.5 6/2006(ii)ம் இலக்கமும், 10.11.2006ம் திகதியும் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 14ம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட பதவிகளிற்குரிய பயிலுநர்கள், பயிற்சியாளர்களிற்கு அவர்களுடைய நாட்சம்பளத்தின் 15% விசேட படியாக வழங்கப்படும்.

3. படிகள் மாற்றியமைப்பதன் மூலம் வழங்கப்படவேண்டிய மேலதிக விசேட படிகள் தங்களின் உரிய கருத்திட்டங்களின் விசேட படிகள் 1003*15 எனும் செலவு விடயத்தின் கீழ் சாட்டுதல் செய்யப்படுதல் வேண்டும்.

4. மேற்படி திருத்தங்களிற்கமைய 2012ம் ஆண்டிற்கான விசேட படிகளிற்கான மேலதிக ஒதுக்கீட்டுத் தேவை மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். மதிப்பீடு செய்யும்போது தற்போது சேவையிலுள்ள ஆளணியினரை மட்டும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

5. பொது நிர்வாக அமைச்சின் 28/2010ம் இலக்கமும் 31.12.2010ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் 5% விசேடபடிக் கொடுப்பனவுக்கான ஒதுக்கீடுகள் உரிய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் 2012ம் ஆண்டு மதிப்பீடுகளில் 1003*15 எனும் செலவு விடயத்தின் கீழ் ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே மேலதிக நிதி ஒதுக்கீட்டுத் தேவையை இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரிக்கமைவாகத் தயார் செய்து 21.12.2011ம் திகதிக்கு முன்னர் மாகாணத் திறைசேரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்திற்கமைய தங்களது மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அ.மனோரஞ்சன்
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி,
பிரதம செயலாளருக்காக,
வட மாகாணம்.

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொதுநிர்வாகம் - வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
4. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு – வ.மா

} தகவலுக்காக

# REVISION OF SPECIAL ALLOWANCES OF THE PUBLIC SERVICE IN TERMS OF THE BUDGET PROPOSAL -2012

**MINISTRY:-** ..........................................

**HEAD:-** ..........................................

**PROGRAMME:-** ..........................................

**PROJECT:-** ..........................................

| Initial Salary Scale per Month | Additional Requirement for Special Allowance from 01.01.2012 to 31.12.2012 (Phase 1) | | | | Additional Requirement for Special Allowance from 01.07.2012-31.12.2012 (Phase 2) | | Total Requirement |
|---|---|---|---|---|---|---|---|
| | 10% | | 5% | | 5% | | |
| | No.of Staff | Amount | No.of Staff | Amount | No.of Staff | Amount | |
| Initial Salary≥Rs.22,935/= | - | - | xxxxx | xxxxx | xxxxx | xxxxx | xxxxx |
| Initial Salary<Rs.22,935/= | xxxxx | xxxxx | - | - | - | - | xxxxx |
| **Total** | xxxxx | xxxxx | xxxxx | xxxxx | xxxxx | xxxxx | xxxxx |

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல : 31/2011

எனது இல: EST/5/1/33
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2011, டிசம்பர் 12 ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம், அரசாங்க சேவையில் உள்ள படிகளின் திருத்தம்**

அரசாங்கத்தினால் 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள படிகள் பின்வரும் விதங்களில் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

**02. விசேட படி:**

2.1 2010.12.31 ஆம் திகதிய 28/2010 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் கீழ் படிகள் வெளியாக்கங்களாக அடிப்படை மாதாந்த வேதனத்தின் நூற்றுக்கு ஐந்து (5%) இற்குச் சமனான தொகையொன்றாக வழங்கப்பட்ட அத்துடன் ஓய்வூதியத்திற்கு உரித்தற்றதாக உள்ள விசேட படியொன்றிற்குப் பதிலாக விசேட படியொன்று பின்வரும் விதங்களில் வழங்கப்படுதல் வேண்டும்.

அ) ரூபா 22,935.00/= இற்குக் குறைவாக உள்ள ஆரம்ப வேதனப்படியொன்றுடன் மாதாந்த வேதன அளவுத்திட்டமொன்றிற்கு உரிய பதவிகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு 2012.01.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு படிகள் வெளியாக்கங்களாக அடிப்படை மாதாந்த வேதனத்தின் நூற்றுக்கு பதினைந்து (15%) இற்குச் சமனான தொகையொன்றாகக் கணிப்பிடப்பட்ட அத்துடன் ஓய்வூதியத்திற்கு உரித்தற்றதாக விசேட படியொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

ஆ) ரூபா 22,935.00/= இற்கும் அதற்கு மேலும் உள்ள ஆரம்ப வேதனப்படியொன்றுடன் மாதாந்த வேதன அளவுத்திட்டமொன்றிற்கு உரிய பதவிகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு 2012.01.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு படிகள் வெளியிடங்களாக அடிப்படை மாதாந்த வேதனத்தின் நூற்றுக்கு பத்து (10%) இற்குச் சமனான தொகையொன்றாகக் கணிப்பிடப்பட்டு அத்துடன் ஓய்வூதியத்திற்கு உரித்தற்றதாக விசேட படியொன்று வழங்கப்படுதல் வேண்டும். மேலும், இந்தப் படியானது 2012.07.01 ஆம் திகதியில் இருந்து நூற்றுக்கு பதினைந்து (15%) வரை அதிகரிக்கப்படுதல் வேண்டும்

இ) 2007.05.11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளப்பணியில் அமர்த்தப்பட்ட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு “அ” மற்றும் “ஆ” பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட பின்பு மீளப்பணியில் அமர்த்தப்பட்ட பதவிகள் குறித்து சார்ந்திருந்து அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தப்படியின் அடிப்படையில் இந்த விசேட படியானது வழங்கப்படுதல் வேண்டும்.

**2.2 நாளாந்தக் கூலிகளில் சேவையாற்றுகின்ற பணியாளர்களுக்காக வழங்கப்படும் படிகள்:**

2010.12.31 ஆம் திகதிய 28/2010 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் கீழ் அமைய நாளாந்தக் கூலியில் சேவையாற்றுகின்ற பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி வெளியிடங்களாக அவர்களுடைய நாளாந்தக் கூலியின் அடிப்படையில் வழங்கப்பட்ட நூற்றுக்கு ஐந்து (5%) இற்குச் சமனான படியொன்று 2012.01.01 ஆம் திகதியில் இருந்து நூற்றுக்கு பதினைந்து (15%) இற்குச் சமனானவாறு கணிப்பிடப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

3. ஓய்வூதியத்துக்குச் சேர்க்கப்பட்டுள்ள படிகள்:

2010.12.31 ஆம் திகதிய 28/2010 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 9.2 ஆம் உப பந்தியின் கீழ் வழங்கப்பட்ட படியானது பின்வரும் விதங்களில் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

I. 2003.12.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு ஓய்வுபெற்ற அரசாங்கப் பணியாளர்களின் ஓய்வூதியத்திற்கு மேலே குறிப்பிட்டவாறு வழங்கப்படுகின்ற ரூபா 750/= படியானது 2012.01.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு ரூபா 1250/= இனை அடையும் பொருட்டு ரூபா 500/= இனாலும் 2012.07.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு ரூபா 1750/= இனை அடையும் பொருட்டு மேலும் ரூபா 500/= இனாலும் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

II. 2004.01.01 ஆம் திகதியில் இருந்து 2005.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரசாங்கப் பணியாளர்களின் ஓய்வூதியத்திற்கு மேலே குறிப்பிட்டவாறு வழங்கப்படுகின்ற ரூபா 250/= படியானது 2012.01.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு ரூபா 500/= இனை அடையும் பொருட்டு ரூபா 250/= இனாலும் 2012.07.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு ரூபா 750/= இனை அடையும் பொருட்டு மேலும் ரூபா 250/= இனாலும் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

04. மேலதிக கொடுப்பனவுகள்:

எவராவது உத்தியோகத்தருக்கு இந்த அறிவுறுத்தல்களை தவறாகப் பொருள்கோடல் செய்ததன் விளைவாக அல்லது எழுத்து அல்லது எதாவது கணக்கிடுதலில் உள்ள தவறின் ஊடாக மேலதிகமாக வழங்கப்பட்டால், அப்படி மேலதிகமாக வழங்கப்பட்ட தொகையை மீளச்செலுத்துவதற்கு அவர் பொறுப்பாவார்.

**2.3 பயிலுநர் மற்றும் பயிற்சிக்கான படிகள்:**

2006.11.10 ஆம் திகதிய 06/2006(II) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 14 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட பதவிகளின் பொருட்டு தற்பொழுது வழங்கப்படும் நூற்றுக்கு ஐந்து (5%) இற்குச் சமனான விசேட படியானது 2012.01.01 ஆம் திகதியில் இருந்து நூற்றுக்கு பதினைந்து (15%) இற்குச் சமனானவாறு கணிப்பிடப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

**2.4 முப்படைகளின் உறுப்பினர்கள்:**

பிரகாரம் முப்படைகளின் உறுப்பினர்களுக்கு விடயத்திற்கு ஏற்றால் போன்று 2012.01.01 ஆம் திகதி மற்றும் 2012.07.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு மேற்படி 2.1 ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் விசேட படியானது வழங்கப்படுதல் வேண்டும்.

**2.5 கௌரவ அமைச்சர் அவர்களின் பிரத்தியேக பணித்தொகுதியினருக்கான படிகள்:**

கௌரவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களினை அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேக பணித்தொகுதியினர் அத்துடன் மேலும் கௌரவ மாகாண சபைகளின் ஆளுநர்கள், கௌரவ மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேக பணித்தொகுதியினர்கள் மற்றும் அமைச்சரவைச் செயலாளரின் இணைச் செயலாளர்களுக்கு விடயத்திற்கு ஏற்றால் போன்று 2012.01.01 ஆம் திகதி மற்றும் 2012.07.01 ஆம் திகதியில் இருந்து பயனுறுமாறு மேற்படி 2.1 ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் விசேட படியானது வழங்கப்படுதல் வேண்டும்.

05. நிதி ஏற்பாடுகள்:

மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட படியானது 1003 ஆம் இலக்க வாக்கின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளால் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் கொடுப்பனவுகள் தற்பொழுதுள்ள ஏற்பாடுகளுக்கு விஞ்சுவதற்கு அண்மித்துக் கொண்டிருக்கின்ற பொழுது உடனடியாக மேலதிக ஏற்பாடுகளுக்கான வேண்டுகோள் வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

06. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ. வீ. அபேகோன்
செயலாளர்.
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.